# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# ஐந்தாம் பத்து

## நான்காம் திருவாய்மொழி - ஊரெல்லாம்
## மடலூர்தற்கு இயலாதபடி இரவு நீண்டது குறித்துத் தலைவி வருந்திக் கூறுதல்

** ஊர் எல்லாம் துஞ்சி * உலகெல்லாம் நள்ளிருளாய் *
நீர் எல்லாம் தேறி * ஓர் நீள் இரவாய் நீன்டதால் **
பார் எல்லாம் உண்ட * நம் பாம்பணையான் வாரானால் *
ஆர்? எல்லே! வல்வினையேன் * ஆவி காப்பார் இனியே 1

ஆவி காப்பார் இனி யார்? * ஆழ் கடல் மண் விண் மூடி *
மா விகாரமாய் * ஓர் வல்லிரவாய் நீன்டதால் **
காவி சேர் வண்ணன் * என் கண்ணனும் வாரானால் *
பாவியேன் நெஞ்சமே! * நீயும் பாங்கு அல்லையே 2

நீயும் பாங்கு அல்லை காண் * நெஞ்சமே! நீள் இரவும் *
ஓயும் பொழுது இன்றி * ஊழியாய் நீண்டதால் **
காயும் கடுஞ்சிலை * என் காகுத்தன் வாரானால் *
மாயும் வகை அறியேன் * வல்வினையேன் பெண் பிறந்தே 3

பெண் பிறந்தார் எய்தும் * பெருந்துயர் காண்கிலேன் என்று *
ஒண் சுடரோன் * வாராது ஒளித்தான் ** இம்மண் அளந்த
கண் பெரிய செவ்வாய் * எங்கார் ஏறு வாரானால் *
எண் பெரிய சிந்தை நோய் * தீர்ப்பார் ஆர் என்னையே? 4

ஆர் என்னை ஆராய்வார்? * அன்னையரும் தோழியரும் *
நீர் என்னே? என்னாதே * நீள் இரவும் துஞ்சுவரால் **
கார் அன்ன மேனி * நம் கண்ணனும் வாரானால் *
பேர் என்னை மாயாதால் * வல்வினையேன் பின் நின்றே 5

பின் நின்ற காதல் நோய் * நெஞ்சம் பெரிது அடுமால் *
முன் நின்று இரா ஊழி * கண் புதைய மூடிற்றால் **
மன் நின்ற சக்கரத்து * எம் மாயவனும் வாரானால் *
இந்நின்ற நீள் ஆவி * காப்பார் ஆர் இவ்விடத்தே? 6

காப்பார் ஆர் இவ்விடத்து? * கங்கிருளின் நுண் துளியாய் *
சேட்பாலது ஊழியாய்ச் * செல்கின்ற கங்குல் வாய் **
தூப் பால வெண்சங்கு * சக்கரத்தன் தோன்றானால் *
தீப் பால வல்வினையேன் * தெய்வங்காள்! என் செய்கேனோ? 7

தெய்வங்காள்! என் செய்கேன்? * ஓர் இரவு ஏழ் ஊழியாய் *
மெய் வந்து நின்று * எனதாவி மெலிவிக்கும் **
கை வந்த சக்கரத்து * என் கண்ணனும் வாரானால் *
தைவந்த தண்தென்றல் * வெஞ்சுடரில் தான் அடுமே 8

வெஞ்சுடரில் தான் அடுமால் * வீங்கிருளின் நுண் துளியாய் *
அஞ்சுடர வெய்யோன் * அணி நெடுந்தேர் தோன்றாதால் **
செஞ்சுடர்த் தாமரைக் கண் * செல்வனும் வாரானால் *
நெஞ்சிடர் தீர்ப்பார் இனி யார்? * நின்று உருகுகின்றேனே 9

நின்று உருகுகின்றேனே போல * நெடு வானம் *
சென்று உருகி நுண் துளியாய்ச் * செல்கின்ற கங்குல் வாய் **
அன்று ஒருகால் வையம் * அளந்த பிரான் வாரான் என்று *
ஒன்று ஒருகால் சொல்லாது * உலகோ உறங்குமே 10

** உறங்குவான் போல் * யோகு செய்த பெருமானை *
சிறந்த பொழில் சூழ் * குருகூர்ச் சடகோபன் சொல் **
நிறம் கிளர்ந்த அந்தாதி * ஆயிரத்து இப்பத்தால் *
இறந்து போய் வைகுந்தம் * சேரா ஆறு எங்ஙனேயோ? 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---